34 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 17-4-33

அடுப்பிருக்குது வா! வா!



Courtesy of "Hindustan Times"

பிரிட்டிஷ் பிரதம மந்திரியான ராம்சே மாக்டனல்டை வெள்ளைக் கதோசி என்ற மரத்தில் கன்ஸேர் வேடிவ்கள் கட்டிப்போட்டு விட்டார்கள். பெரு நெருப்பொன்றை மூட்டி ஸாமுயேல் ஹோரைக் காவல் போட்டிருக்கிறார்கள். "ஏ ஸாப்ரூ வா! ஜயகர் வா! அடுப்பு மூட்டி யிருக்கிறோம். சுயராஜ்யச் சோறு சமைத்துக் கொண்டு போங்கள்" என்று கூவுகின்றார்கள். அடுப்பென்று நினைத்துப் போகும் அண்ணாத்தைகள் பெரு நெருப்பில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பதில் ஐயமுண்டோ?

கொல்லன் உலையில் ஈ?

காங்கிரஸ் கமிட்டிகளெல்லாம் சட்ட விரோதமான சபைகளாய் விட்டன. காங்கிரஸ்காரர்கள் ஓரிடத்தில் கூடி சுதந்திரமாக வாதம் செய்வதற்கும் அரசாங்கம் அநுமதிக்க மாட்டேனென்கிறது. அரும் பெருந் தலைவர்களெல்லாம் சிறையிலேயே கிடக்கின்றனர். இந்த மாதிரி காங்கிரஸ் மகா சபைக்கு உருவமின்றி, அஞ்ஞாத வாசம் செய்ய நேர்ந்திருக்கும் இச்சமயத்தை நல்ல சவுகர்யமான சமயமென நினைத்துக் கொண்டு காங்கிரஸைப் பற்றி மனம் போனவாறு வருணிக்க ஓர் கூட்டம் முற்பட்டிருக்கிறது. தட்டிப் பேச ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டம் பேசுவானன்றோ!

காங்கிரஸ் ஆரம்பித்த சட்ட மறுப்பு இயக்கத்தினால் சமூக ஒற்றுமை குலைந்து போய் விட்டதென்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விட்டதென்றும் அன்று சென்னை மிதவாதப் பத்திரிகையான 'ஹிந்து' எழுதிற்று. அதற்கு ஒத்து ஊதுவதே போன்று கேல்கரின் 'மராட்டா' பத்திரிகையும், பிறகு 'ஸர்வெண்ட் ஆப் இந்தியா' பத்திரிகையும் அதே தோரணையில் காங்கிரஸைப் பற்றி ஏதேதோ எழுதி யிருக்கின்றன.

இந்த அதிகப் பிரசங்கிகளான பத்திரிகைகளுக்கு நற்புத்தி புகட்ட வேண்டுவது காங்கிரஸ்காரர்களின் கடமையாகி விட்டது. தென்னிந்தியாவில் பிரபல காங்கிரஸ் வாதிகளனைவரும் சேர்ந்து 'ஹிந்து' பத்திரிகைக்கு ஓர் மறுப்பு தயாரித்திருக்கிறார்கள்.

ஒரே ஒரு காங்கிரஸ்காரன் சிறையில் வைக்கப்பட்டிருந்தாலும் அப்போதும் சட்ட மறுப்பு இயக்கம் நடந்து வருவதாகத்தான் அர்த்தம். இவ்வளவு நாள் அடக்குமுறை ஆட்சி புரிந்த பின்னரும் சட்ட மறுப்பு இயக்கம் நாட்டில் ஓயாமலிருப்பது கண்டு சர்க்காரே திகைத்துப் போய் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. வரப் போகும் புதிய அரசியலில் காங்கிரஸ் ஆதிக்கம் பெறலாகாது என்று சர்க்கார் மனதுக்குள் ஜபஞ் செய்து கொண்டிருக்கிறது. அதே போல புதிய அரசியல் வருவதற்கு முன்னமே, காங்கிரஸின் செல்வாக்கை இந்நாட்டில் அழிப்பதற்கு வழி உண்டா என்று மிதவாத வெளவால்களும், வகுப்பு வாதப் பித்தர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்ச்சியின் பயனாகவே காங்கிரஸைத் தாக்கி விஷமமான கட்டுரைகள் சிற் சில அங்குமிங்கும் தோன்றுகின்றன. இந்த விஷமிகளின் பிரசாரத்தை நிறுத்துவதற்கு வெளியே யுள்ள காங்கிரஸ்காரர் முயல்வார்களென்பதை நாமறிவோம்.

அன்னிய சர்க்காரின் மனப் பான்மை அடியோடு மாறும் வரையில், சுதந்திரத்தின் ஒளி தெரியும் வரையில் இந்தத் தேசத்தில் 'ராஜியப் போர்' நடந்து கொண்டுதா னிருக்கும். ராஜியப் போர் பல வகையானது. 'சட்ட மறுப்பு' என்பது அவ் வகைகளில் ஒரு வகைப் போர்.

காங்கிரஸ் என்ற கொல்லன் உலையில் வேறு வித அபிப்பிராயமுள்ள ஈக்களுக்கு வேலையேயில்லை. ஈக்களின் அபிப்பிராயத்துக்காகவும் காங்கிரஸ் காத்திருக்கவில்லை. ஆகவே நாட்டின் ராஜீய நிலையைப் பற்றிய தங்களது அபிப்பிராயங்களை எதிரிகள் தப்பர்த்தம் செய்து கொள்ளாதபடி பகிரங்கமாக, அச்சமின்றி, தெளிவாக காங்கிரஸ்காரர்கள் சொல்லி விட வேண்டிய சமயம் வந்து விட்டதென நாம் எண்ணுகின்றோம்.

மிதவாதிகள் மகா நாடு

கல்கத்தாவில் மிதவாதிகள் மகா நாடு கூடியிருக்கிறது. அதில் தலைவர் ராமச்சந்திர ராவ் புரிந்த பிரசங்கத்தைப் பற்றி, "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை சில வார்த்தைகளில் மிக நேர்த்தியாக அபிப்பிராயம் எழுதி யிருக்கிறது. அதாவது:—

"மிதவாதிகள் மகா நாட்டுத் தலைவரின் பிரசங்கம் வெள்ளைக் காகிதத்தைப் பற்றி ஒரு திறமை வாய்ந்த வியாசமா யிருக்கிறது. அதை எம். ஏ. பட்டப் பரீட்சைக்குப் பாடமாக வைக்கலாம். ஆனால், நாட்டிலே கண்ணை உறுத்திக் கொண்டிருக்கும் அரசியல் நிலைமையைப் பற்றி ஆராய வேண்டிய ஒரு மகா நாட்டுக்கு அது ஏற்றதன்று. 48 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமா யிருக்கிறது இவர் பிரசங்கம்! மிதவாதிகள் வெள்ளைக் காகிதத்தைப் பற்றி ஏற்கனவே ஏராளமான அபிப்பிராயம் கூறி விட்டார்கள். அவை யெல்லாம் பத்திரிகை யாபீசுகளில் எழுத்துக் கோர்க்கப் பட்டு, ஒரு மாத காலமாக இடங் கிடைக்காமல் தங்கிக் கிடக்கின்றன. அப்படிப்பட்ட ஊசிப் போன அபிப்பிராயங்களை யெல்லாம் திரட்டி ஒரு பெரிய பிரசங்கமாகக் கோத்து விட்டார் இந்த ராவுஜி."

50-வருட பலன்

சமீபத்தில் நமது சென்னை சர்க்கார் "1881—1931-வருடங்களில் சென்னை" என்று ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள். அது சொல்லும் சில புள்ளி விவரங்களைப் பார்ப்போம்.

நமது ராஜதானியின் ஜனத்தொகை மட்டில் இந்த 50-வருடங்களில் 310 லட்சத்திலிருந்து 470 லட்சத்துக்கு உயர்ந்து விட்டது. ஆனால், அதற்கேற்றபடி தொழில்களில் உள்ளவர்களின் தொகை அதிகரித் திருக்கிறதா? அதுதானில்லை.

நெசவு, நூற்றல் முதலிய தொழில்களில் உள்ளவர் தொகை 25-லட்சத்திலிருந்து 13லட்சமாகவும், தச்சு, கொல்லுத் தொழில் புரிவோர் தொகை பாதிக்கு மேலும், கொத்தவேலை புரிவோர் தொகை 6-லட்சத்திலிருந்து ஒன்றரை லட்சமாகவும் உணவு தானிய வியாபாரத்தி லீடுபட்டவர் தொகை 17-லட்சத்திலிருந்து 5½ லட்சமாகவும், இலக்கியம் ஓவியம் முதலிய கலைகளால் சம்பாதிப்பவர் தொகை 1,28, 893-லிருந்து 60, 712-ஆகவும் குறைந்து விட்டன.

இவ்வாறு முக்கியமான எல்லாத் தொழிலிலும் ஆட்கள் குறைந்து விட்டார்கள். இதனால் தன் சம்பாத்தியத்தைக் கொண்டு ஜீவிப்போர் தொகை 1, 23, 409 லிருந்து 29, 977 ஆகக் குறைந்து விட்டது. எனவே, பிறர் சம்பாத்தியத்தைக் கொண்டு வாழும் பேடி வாழ்க்கையே வலுத்து விட்டது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஆனால், ஒரு துறையில் மாத்திரம் தொழில் புரிவோர் தொகை மிகவும் அதிகரித்து விட்டது. அது என்னவோ என்று எவரும் பரமானந்தப்பட்டு விட வேண்டியதில்லை. வீடுகளில் குற்றேவல் புரிவோர் தொகைதான் 2½ லட்சத்திலிருந்து 77-லட்சத்துக்கு உயர்ந்திருக்கிறது.

அரசாங்கத்தின் 50-வருட நிர்வாக பலனைக் கப் பேடித் தனமும் அடிமைத் தனமும் இவ்வளவு அதிகரித் திருப்பதை என்னென்று சொல்லுவது? இவ்வரசாங்க முறையினை மாற்றும் சுயராஜ்யத் திட்டங்களில் ஈடுபட இதை விட வேறு காரணமும் வேண்டுமோ? இன்னமும் கும்பகர்ணனைப் போல் உறங்கிக் கொண்டிருக்கலாமா?

இராத்திரி ஜமா!

இராத்திரியில் நண்பர்கள் ஜமா சேருவது ஒரு ஷோக்கு தான். அதுவும் பேசுவதற்கு ஏதாவது விஷயமொன்றும் இருந்து விட்டால் பொழுது வெகு சுலபமாய்ப் போகும். கடைசி நாள் டெல்லி சட்டசபை இரவு வெகு நேரம் வரை நடந்ததென்றும் பிறகு 1 மணி சமாருக்கு கலைந்து போனதென்றும் கேள்விப் பட்டோம்.

தற்போது டெல்லி சட்டசபையிலுள்ள அங்கத்தினர்கள் இந்த இரவு ஜமாவை ஒரு ஷோக்காக அனுபவித்திருப்பார்களோ யன்றி தேசத்திற்காக மனது உருகிப் போயோ, அல்லது வாக்கு வாதத்தில் நேரம் போவது தெரியாமலோ நள்ளிரவு வரை கூடியிருந்தார்களில்லை.

முன்னொரு காலத்தில் இதே டெல்லி சட்டசபையில் ரௌலட் மசோதா விவாதத்துக்கு வந்தபோது இரவு வெகு நேரம் வரை கடுமையான வாக்கு வாதம் நடைபெற்றது. இரவு 12 மணி சுமாருக்கு அப்போது அங்கத்தினராயிருந்த பண்டித மாளவியா எழுந்திருந்து கர்ஜித்தார். தேசத்திலுள்ள அத்தனை மக்களின் சார்பாகவும். தலைவர் அன்று சோகமாகப் பிரசங்கம் செய்தார். அன்றைய இரவு பிரசங்கத்தை அகில இந்தியாவும் கவனித்துக் கொண்டிருந்தது. அன்றைய இரவை இன்னமும் நாம் மறக்கவில்லை.

ஆனால் சமீபத்தில் டெல்லி சட்ட சபை இரவு வெகு நேரம் வரை நடவடிக்கைகளை நடத்திற்றே, யாராவது அதைப்பற்றிக் கவலைப் பட்டார்களா? ஒருவரும் கவனிக்கக் கூட இல்லை. என்? இப்போதுள்ள அங்கத்தினர்கள் வெறும் சாம்பிராணிகள், ஏதோ தற்பெருமை சம்பாதிப்பதற்காக டெல்லிக்குப் போயிருப்பவர்களே யன்றி, தேச பக்தி யென்பதின் உள்ளர்த்தத்தை அறியாதவர்கள். அன்றைய இரவுக் கூட்டத்தில் எத்தனை பேர் தூங்கி வழிந்தார்களோ!

ஆலயப் பிரவேச மசோதா தினத்தன்று இன்னும் சில நிமிஷங்கள் குந்தி யிருந்தால் மசோதாவின் முடிவு தெரிந்திருக்கும். அன்றைக்கு அவனவனுக்கு பசி வயிற்றைக் கிள்ளவே பரபரப்புடன் எழுந்து விட்டான். இந்த தூங்கு மூஞ்சிகள், கடைசியில் ஒரு நாள் இரவு ஜமா நடத்தின ரென்றால் அது ஷோக்குக்காகவே யன்றி வேறு உயர்ந்த உணர்ச்சியினு லல்ல வென்பதை விவரிக்கவும் வேண்டுமோ?

கூண்டுக்கு வெளியே கோகிலம்

பட்சிகளின் குணமே ஒரு தனித் தினிசு. அவை கூண்டை விட்டு வெளியே வருமானால், அவற்றிற்குப் பரமானந்தம். நமது ஸரோஜினி தேவி இந்தியாவின் கோகிலப் பட்சி யல்லவா? அவர் தமது ஜாதிக் குணத்தைக் காட்டுவதில் விந்தை யென்ன?

ஒரு வருஷம் கூண்டுக் கிளிபோல் அடைபட்டுக் கிடந்த ஸரோஜினி வெளியே வந்தது தான் தாமதம். வந்து விட்ட தப்பா ஒரு பத்திரிகை நிருபர் பட்டாளம்! "இதேதடா சனியன்" என்று அஞ்சிய சரோஜினி, "என்னைத் தொல்லைப் படுத்தினீர்களானால், நான் மறுபடியும் எரவாடாக் கூண்டுக்குப் போய் விடுவேன்" என்று பயமுறுத்தினாள்.

சரோஜினியின் வீரவுரை

இந்தியர்களின் இதயத்தில் எரிந்து கொண்டிருக்கும் தேச பக்தி என்ற நெருப்பை அடக்குமுறை என்ற தண்ணீரால் அவித்துவிட முடியாது. உயரமான மதில்களுக்குப் பின்னாலுள்ள சிறைக்குள் இவ்வளவு வருஷம் இருந்து விட்டு நான் திரும்பி வந்திருக்கிறேன். ஆயினும் எனது சுதந்திர வெறி இன்னும் அதிகமாகவே ஆகியிருக்கிறது. மனித வாழ்க்கை, ஸமூகம், ராஜீயம், ஆத்மீகம் முதலிய எல்லாத் துறைகளிலும் இந்தியாவின் போக்கு தனியான போக்கு. ஆகவே இந்தியாவுக்குத் தேவையான விடுதலையை இந்தியாவின் தனி முறைகளால்தான் அடைய முடியும்.

—அமெரிக்காவுக்கு 12-4-33ல் சரோஜினி தேவி விடுத்த செய்தி.

வருஷம் ஒன்றாகக் காணாது வெறித்துப் போன கண்களுக்கு எரவாடா கோயிலிலுள்ள எம்மான் தரிசனமின்றி வேறு வேலையுமுண்டா? ஆகவே சிறையிலிருக்கும் காந்திஜியைக் காண சரோஜினி தேவி சென்றாள்.

கிழவரைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. அவர் ஆள்கண்ட சமுத்திரம். வாராது வந்த மா மருந்தைப்போல், இக்கோகிலத்தைக் கண்டதும், குதூகல மடைந்து விட்டார்.

"இதென்ன இழவு! நான் வெள்ளைக் கடிதத்தைப் பார்க்கவேயில்லை. அதைப்பற்றி இந்தப் பத்திரிகை நிருபர்கள் அபிப்பிராயங் கொடுவென்று தொல்லைப் படுத்துகிறார்களே. நான் என்ன செய்யட்டும்?" என்று காந்திஜியிடம் யோசனை கேட்டாள் ஸரோஜினி.

குழந்தை கேட்ட யோசனைக்கு சொல்லைக் கொடுக்க வேண்டியதை விட்டு, கேலி செய்ய ஆரம்பித்து விட்டார் கிழவர்! "ஏன்? உன் தலையில் நரைத்திருக்கும் வெள்ளை மயிர்களைப் பற்றி ஒரு அறிக்கை கொடுக்கிறது தானே" என்றார் முதியவர்.

எவ்வளவு தான் செல்லப் பெண்ணா யிருக்கட்டுமே; இதனால் கோபம் வருமா, வாராதா? "என் கூந்தலில் சில நரைத்து வெளுத்தது உங்களால் வந்த வினை தான். நீங்கள் உபவாசம் கிடந்தீர்களே! அந்தக் கவலை பிடித்த ஐந்து நாளில் அவை இப்படி நரைத்துப் போயின" என்று வெடுக்கென்று கிழவர் வாயடைக்கும்படி பதில் தந்தாள் சரோஜினி.

காந்திஜியைத் தரிசித்த பின்பு சரோஜினி தேவி பம்பாய்க்கு வந்தாள். அங்கு தனது நண்பர்களிடம் ஆனந்தமாக உரையாடினாள்.

பிரம்பினாலான ஒரு புஷ்பக் கூடையைக் காட்டி "இதை நான் கெட்டுப் போக்கவே மாட்டேன். மகாத்மா உபவாசத்தை நிறுத்திய பொழுது இதை எனக்குத் தந்தார். தினந்தோறும் புதிய புதிய மலர்களால் இதை நிரப்புவேன். நான் ஜெயிலுக்கு மறுபடியும் போனால், இதையும் விடாது கொண்டு போவேன். என் பெண் பத்மஜாவுக்கும் எங்கள் மகாத்மா இந்த மாதிரி ஒரு கூடை கொடுத்திருக்கிறார்" என்று பெருமை பாராட்டிக் கொண்டாள். ஜெயிலை விட்டு வெளிவரும் பொழுதே, மறுபடியும் ஜெயிலுக்குப் போவதே ஞாபகமா!

இவ்வாறு, ஆடிப் பாடி, கவலை யில்லாது ஆனந்தமாய்த் திரியவேண்டிய கோகிலங்களையும், அன்புக்கும் தமாஷான சம்பாஷணைகளுக்குமாகவே பிறந்தவர் போன்ற மகாத்மாஜியையும் கூண்டி லடைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதே இவ்வரசாங்கத்திற்கு! அதுதான் பரிதபிக்கத்தக்க விஷயம்.

அழையா விருந்து சுவாமி

ஹரித்துவாரத்தில் நடந்த கும்ப மேளம் மிக விசேஷமான உற்சவம். அங்கு ஏறக்குறைய இரண்டரை லட்சம் ஜனங்கள் கங்கா ஸ்நானம் செய்தார்கள். இவ் வுற்சவ காலத்தில் நடந்த சனாதன தர்ம மகா நாட்டுக்கு பண்டித மாளவியாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். மாளவியாஜி அங்கு சென்ற பொழுது, லட்சக் கணக்கான ஜனங்கள் கூடிய மிக வைபவமான வரவேற்பும் ஊர்வலமும் நடந்தன. "வந்தே மாதரம்!" "மாளவியாஜி ஜே!" "மகாத்மாஜி ஜே" என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன.

மகா நாடு நடக்கச் சிறிது நேரம் முன்னதாக ஸ்ரீ சங்கராச்சாரியார், சில சாதுக்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். மாளவியாஜியுடன் ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேச சம்பந்தமாக வாதிக்க விரும்புவதாக அவருக்குச் சொல்லியனுப்பினார். வாது செய்வதானால், ஒரு சிறிய சபை தான் நல்லதென்று மாளவியாஜி பதில் அனுப்பினார்.

ஜகத்குரு மகாநாட்டுக்கு வந்து சேர்ந்தார். "என்னோடு வாதிப்பதாயின், நான் தயாரா யிருக்கிறேன். மகாநாட்டில் பிரசங்கம் செய்வதாயின், என் அனுமதி பெற்றே செய்யவேண்டும்" என்று மாளவியாஜீ அவருக்குக் கூறினார்.

"அனுமதி" என்ற வார்த்தையில் ஜகத் குருவுக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. "சனாதன தர்மத்துக்கு நானே போஷகனா யிருந்து வந்திருக்கிறேன். இப்பொழுதும் மதத் தலைவன் என்ற முறையிலேயே இங்கு வந்திருக்கிறேன்"

சங்கராச்சாரியார் ஒரு பிரசங்கம் செய்யலானார்:—"நானே பெரிய குரு, அப்படியிருந்தும் மகாநாட்டுக்காரர்கள் எனக்கு ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யவில்லை; மகாநாட்டுக்கும் அழைக்கவில்லை. என்றாலும், அழையா விருந்தாக, நான் இங்கு வரத் தீர்மானித்தேன். நான் பேசுவதற்கு, தலைவரா யிருந்தாலும் சரி, வேறு எவராயினும் சரி, நான் ஒருவரையும் அனுமதி கேட்கப் போவதில்லை" என்றார்.

"தலைவருக்குக் கீழ்ப் படியுங்கள்" என்று பலர் கோஷித்தனர். ஜகத்குரு சிறிது ஏதோ சொல்லி விட்டு, "நான் எந்தத் தலைவருக்கும் தலை வணங்கத் தயாராயில்லை" என்றார். அப்பொழுது "மாளவியாஜிக்கு ஜே!" என்று பலர் கோஷித்தார்கள்.

பிறகு, விவாதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பொழுதும், பலர் "மாளவியாஜிக்கு ஜே!" என்று கோஷித்தனர். சங்கராச்சாரியார் கோஷ்டியினர் சிலர் "ஜகத் குருவுக்கு ஜே!"யும் போட்டார்கள். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. ஜனங்கள் கூக்குரல் போட்டு, சங்கராச்சாரியாரையும் அவரைச் சேர்ந்த சிறிய கூட்டத்தினரையும் வெளியே போகச் செய்து விட்டார்கள்.

அவமானத்தை எதிர்க்க

"கதர் இயக்கத்தை ஒரு காலத்தில் கோயமுத்தூர் சிறப்பாக நடத்திற்று. ஆனால் இப்போதோ! காந்திஜியைச் சிறையில் வைத்துக்கொண்டு இந்தியன் அந்நிய நாட்டுத் துணியை அணிந்து கொள்வதானால் அதைவிட வெட்கக் கேடு வேறுண்டோ? அந்நிய வர்த்தகர்களின் பசப்பு வார்த்தைகள் எரிகிற தீயில் எண்ணெ ஊற்றுவது போன்றது. துளி தேச பக்தி யிருப்பவன் கூட அந்நியரின் வார்த்தைக்கு மோசம் போகலாகாது. நம்மை அவமானப் படுத்த விரும்புபவனைத் தலை குனியச் செய்வதற்கு ஒரே வழிதான். நாமனைவரும் கதர் அணிவதால் அந்நிய வர்த்தகனை அவமானப் படுத்த முடியும். தேசிய கௌரவமே நமது செல்வம்."

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கோயமுத்தூர் கதர் காட்சிக்கு விடுத்த செய்தி.)

வாள்கோழி மயிலாட்டம்

டெல்லி அஸெம்பிளியில் 'ஸ்வராஜ்யக் கட்சி' என்று ஒரு புதிய கட்சியைக் கிளப்பி யிருக்கிறார்கள். முற்காலத்தில் இந்த அஸெம்பிளியை ஆட்டி வைத்த ஓர் கட்சியின் பெயரை இரவல் வாங்கிக் கொண்டால் போதுமா? கேவலம் பெயரால் என்ன செய்ய முடியும்? அஸெம்பிளியை அலங்கரித்த மோதிலால் நேரு, விதல்பாய் படேல், லஜபதிராய், மாளவியா போன்ற மூனிகளுக்கு எங்கே போவது? பெயரில் பெருமையா? செயலில் பெருமையா?

"மீகு தெலிதா ஐயா?"

ஸர். கே. வி. ரெட்டி ஓர் மாஜி மந்திரி; தென்னாப்பிரிக்காவுக்கு இந்திய சர்க்காரின் ஏஜண்டாகச் சென்று வந்தவர். ஓரிடத்தில் 'இந்தியாவின் மீதுள்ள' கடனைப் பற்றிச் சில நாளைக்கு முன் பேசுகையில், அக் கடன் அவசியமானதென்றும், ரெயில்வே போன்று, பணங் குட்டிபோடும் துறைகளிலேயே செலவழிக்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினாராம்.

1857-ம் ௵ வரையில் கிழக்கிந்தியக் கம்பெனியான வியாபாரக் கூட்டத்தார் நடத்திய வெளி நாட்டு யுத்தங்களில் 50 கோடியும் சிப்பாய் கலகத்தை அடக்க 40 கோடியும், 1875-௵த்துக்கும் 1920-ம் ௵த்துக்குமிடையே பிரிட்டிஷார் நடத்திய யுத்தங்களுக்கு 397 கோடியும், பர்மா யுத்தங்களுக்கு 102 கோடியும் செலவழிக்கப்பட்டதென்பதும், அந்தக் கடனெல்லாம் நமது தலையில் அநியாயமாகச் சுமத்தப்பட்டிருக்கிறதென்பதும் ஹே ரெட்டியாரே! மீகு தெலிதா?

ரெயில்வேக்களில் தானென்ன? லாபமேயில்லாமல், யுத்தம்-கித்தம் நடந்தால் சேனை கொண்டு செல்ல வேண்டியதற்குச் சௌகரியமான பாதைகளிலேயே 32 கோடி செலவழிக்கப் பட்டிருக்கிற விஷயமாவது, ரெட்டிகாரிகி தெலிஸானு? லேதா? இந்தக் கோடிக்கணக்கான பணமெல்லாம் போடுவது என்ன குட்டி யென்று, ரெட்டியாரே! சிந்தித்தீரா? யானைக் குட்டியோ, குதிரைக் குட்டியோ போடவில்லை. வட்டிக் குட்டிதான் போடுகின்றது.

போட்டலம் கட்டலாம்!

'வெள்ளைக் கடுதாசி' என்று சர்க்கார் பிரசுரித்த உயர்ந்த புத்தகம் விலை போக மாட்டேனென்கிறதாம். அன்று பார்லிமெண்டில் ஓர் கேள்விக்கு பதில் சொன்ன போது 2200 பிரதிகள் மட்டும் விற்பனையானதாக பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லிற்று. வெள்ளைக் கடுதாசியின் வன்னல் வெள்ளைக்காரர்களுக்கும் தெரியும் போறும்! ஆகவே தான் அச்சுப் போட்ட பிரதிகள் அப்படியே தூங்குகின்றன. இனி அந்த தஸ்தாவேஜுகள் பொட்டலம் கட்டுவதற்கு உபயோகப்படலா மென்று பிரிட்டிஷ் சர்க்காருக்கு இலவசமாக ஓர் ஆலோசனை சொல்லித் தருகின்றோம்.

காதை அறுத்ததால்

பிரிட்டிஷ் ஜாதி எதையும் பொறுத்துக் கொள்ளும். ஆனால் தங்கள் ஜாதியாரையோ தங்கள் வர்த்தகத்தையோ வேறு யாராவது தொட்டு விட்டால் உடனே கோபம் பொத்துக் கொண்டு வந்து விடும்.

1738-ம் ௵த்தில் பார்லிமெண்டு சபையின் முன்னே காப்டன் ஜென்கின்ஸ் என்பவன் வெகு உக்ரமாகப் பேசினான். ஏதோ ஒரு வியாபாரக் கப்பலோடு அவன் சமுத்திரத்தில் போய்க் கொண்டிருந்தானாம். கப்பலை ஸ்பெயின் தேசத்தினர் தாக்கின ரென்றும், தன் காதை அறுத்து விட்டார்க ளென்றும் ஜென்கின்ஸ் முறையிட்டான். "ஹா! பிரிட்டிஷான் காதை அறுக்கலாச்சா? பிரிட்டிஷான் வியாபாரத்தைத் தொடலாச்சா?" என்று 'வால் போல்' என்ற பிரதம மந்திரி துடி துடித்தான். அதன் பயனாக ஸ்பெயினுக்கும் இங்கிலாந்துக்கும் பிரமாதமான யுத்தம் நடந்தது. "ஜென்கின்ஸ் காது யுத்தம்" என்று சரித்திரத்தில் அதற்குப் பெயர்.

அதே மாதிரி ஆங்கில சர்க்காருக்கு இப்போது ருஷியா மீது கோபம் வந்திருக்கிறது. ருஷிய சர்க்கார் சில பிரிட்டிஷ் கம்பெனிக்காரர்கள் மீது குற்றம் சாட்டி விசாரணை நடத்துகிறார்கள். உடனே ஸர் ஜான் ஸைமன் என்ற பிரிட்டிஷானுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. ருஷியாவின் வியாபாரத்தைக் கொல்வதற்காக சுங்க வரியை அதிகப்படுத்துமாறு செய்து விட்டான். பிரிட்டிஷ் ஜாதிக்குள்ள ஜாதி யபிமானமும், வியாபார அபிமானமும் பகிரங்கமாக இதனின்று தெரிகின்றதல்லவா?

ஆனால் இந்தியர்களாகிய நாமோ பெரிய வேதாந்திகளாக இருக்கிறோம். நமது ஜாதியைச் சேர்ந்த சில செட்டிமார்களை பிரஞ்சு அரசாங்கம் 'இந்தோ-சைனா'விலின்று துரத்தி விட்டது. இந்த சம்பவத்தினால் நாம் ஏதாவது அசைந்து கொடுத்தோமா! இல்லவே யில்லை. டெல்லி அஸ்ஸெம்பிளியில் பத்து வார்த்தை பேசியதே போதுமானது என்று நமது 'வேதாந்திகள்' சும்மா யிருந்து விட்டனர். பிரிட்டிஷானுக்கும் இந்தியனுக்கும் உள்ள வித்யாசம் தெரிகின்றதா?

துண்டு துணுக்குகள்

ரீடிங்கின் கோபம்

ரீடிங் பிரபு ஓர் யூதர் ஆவர். ஜெர்மனியில் யூதர்களை ஹிட்லர் கூட்டம் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. அதைக் கண்டு பொறுக்க முடியாமல் ரீடிங் பிரபு ஆத்திர மடைந்து ஆங்கிலோ-ஜெர்மன் சங்கத்தினின்று ராஜீனமா கொடுத்து விட்டார். ஆனால் ரீடிங் பிரபுவின் சகோதரர்களான பிரிட்டிஷ் ராஜீய வாதிகள் கல்கத்தா காங்கிரஸின் போது என்ன செய்தார்கள்? யூதர்களுக்கு ஜர்மனியில் என்ன உபத்திரவமோ அதே உபத்திரவம் இந்தியாவில் காங்கிரஸ்காரர்களுக்கும் தரப்பட்டது. ஆனால் கல்கத்தா நிகழ்ச்சியைப் பற்றி ரீடிங் பிரபுவுக்குக் கவலையே யில்லை. பெரும்பாலும் கிறிஸ்தவர்களான பிரிட்டிஷ் சகோதரர்களுக்கு அறிவு புகட்ட யூதரான ரீடிங் பிரபுவுக்கு விருப்பமில்லை போலும்!

சம்மன் கிளம்பி விட்டது

இந்திய அரசியல் சீர்திருத்தப் பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டியின் தவஜாரோகணம் நடந்து விட்டது. ஒரு கூட்டம் கூடி முதல் தீர்மானமும் செய்து விட்டார்கள். தங்களிடம் இந்தியாவி லிருந்தும் இங்கிலாந்தி லிருந்தும் சாட்சிகள் வரலாமாம். இதற்கு அறிக்கையும் போட்டாகி விட்டது. இந்திய சாட்சிகளின் விண்ணப்பம் தந்தி மூலம் பறக்க வேண்டுமாம். சாட்சிகளுக்குப் படிச் செலவு கொடுக்கக் கூடாது என்பது மாகாண அரசாங்கங்களின் யோசனையாம். இங்கிலாந்து சாட்சிகளின் பாடோ கொண்டாட்டந்தான். அவர்கள் ஆறாயிரம் மைல் பயணம் போக வேண்டியதில்லை யல்லவா? இப்படி யிருந்தாலும் இந்தியாவிலிருந்து சில 'திடுதிண்டங்கள்' புறப்படுமானல், அவற்றின் மூளையை எந்த மரக்காலால் அளப்பது?

வழக்குப் பித்தன்

மிஸ்டர் ஹார்கரே என்பவர் பூனவில் கோர்ட்டு ரகளை பண்ணிக் கொண்டிருக்கிறார். இவர் தான் போன மாதத்தில் காந்தி யடிகளின் மீதும் இன்னும் பலபேர் மீதும் வழக்குப் போட்டவர். ஹரிஜன இயக்கத்தை காந்தி நடத்தக் கூடா தென்று அவர் அப்போது வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கு பலன் தராமற் போகவே இந்தப் பேர்வழி வேறோர் வழக்கைத் தயார் செய்தார். மாக்ஷிமை தாங்கிய சக்கிரவர்த்தியின் சார்பாக ஸாய்ரு, ஜயகர் கேல்கர்களின் மீது ஹார்கரே இந்த வழக்கைப் போட்டார். சர்க்கார் வெள்ளைக் கடுதாசி வியாக்கியானம் செய்யலாகாது என்பது வழக்கின் வேண்டுகோள். "சக்கிரவர்த்தியின் சார்பாகப் பேசுவதற்கு நீ யார்?" என்று மாஜிஸ்திரேட் கூறிவழக்கை எடுத்துக் கொள்ளவில்லை.

திருப்பதிக்கு முடியா? சிறைக்கு இரையா?

கண்ணனூர் சிறையில் 70 நாள் உபவாசம் இருந்த பி. வி. ஆர். குப்தா என்ற ஆந்திரா காங்கிரஸ் கைதி விடுதலை செய்யப்பட்டு கல்லிக்கோட்டை ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார். மிஸ்டர் குப்தா உண்ணு விரத மேற்றதற்குக் காரண மென்ன வென்று கேட்பதற்கு ஸ்ரீயுத கேலப்பன் வந்திருந்தார். தான் திருப்பதி கோயிலின் முன் முடி யிறக்கிக் கொள்வ தென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்ததாகவும் அதற்கு இடையூறாகப் பலவந்தம் செய்து சிறையதிகாரிகள் க்ஷவரம் செய்து விட்டதாகவும், ஆகவே தான் உண்ணு விரதம் ஏற்றுக் கொள்ள நேரிட்ட தென்றும் மிஸ்டர் குப்தா கூறினர்.

அரண்மனையே சிறை

அலஹாபாத்தில் பண்டித மோதிலாலின் அரண்மனையான 'ஆனந்தபவன்' இருக்கின்றது. பண்டித மோதிலாலின் மனைவியும், ஜவஹர்லாலுக்குத் தாயாருமான அன்னை ஸ்வரூபராணி அரண்மனைக்குத் திரும்பி வந்தாள். கல்கத்தா காங்கிரசுக்கு அவள் சென்றதும் வழியில் கைதியாக்கப்பட்டதும் பிறகு விடுதலை செய்யப்பட்டதும் நாம் அறிந்த செய்திகளே. வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் அவள் ஒரு பத்திரிகை நிருபரிடம் சொன்னதாவது:

"எனக்கு ஆனந்தபவன் பெரிய சிறையாயிருக்கின்றது. அஸன்ஸாலில் நான் சிறையிலிருந்த போது 'அது' தங்கக் கூடிய இடமாக எனக்குத் தோன்றிற்று" என்றாள்.

ஸ்வரூபராணி சித்திரத்தில் காந்திஜியைப் பார்க்க எரவாடா செல்வாளென்று தெரிகிறது.

காந்திஜி விடுதலை யடைய

பூனாவில் 'பைஸாநிதி ரானடே' என்று பெயர் பெற்ற ஸ்ரீயுத ரானடே யென்பார் மாருதி கோயிலுக்கு எதிரே உபவாஸ மிருக்கிறாராம். வெறும் தண்ணீரை மட்டும் அருந்திக் கொண்டு அவர் ஒரு மாதம் தவமிருக்கப் போகின்றாராம். மகாத்மா காந்தி விடுதலை யடைய வேண்டுமென்றும், நாட்டில் ஏற்பட்டுள்ள வியாபாரச் சுணக்கம் போக வேண்டுமென்றும், நாட்டின் தொத்து நோய்கள் விலக வேண்டு மென்றும் ஸ்ரீயுத ரானடே கடவுளைப் பிரார்த்திக் கொண்டிருக்கிறாராம்.

உண்ணா விரத நிறுத்தம்

லாகூர் சதி வழக்குக் கைதிகளான ஜயதேவ கப்பூரும், விஜயகுமார சின்ஹாவும், சிவவர்மாவும் சில மாதங்களாக உண்ணா விரத மிருந்தனர். தலைவர் மாளவியா, பிரகாசம் முதலியவர்களின் வேண்டுகோளின்படி கப்பூர் முதலியோர் உண்ணா விரதத்தை நிறுத்தி விட்ட செய்தி கேட்டு சந்தோஷப் படுகிறோம். ஸ்ரீயுத கப்பூரோடு வேலூர் சிறையிலிருந்தவர்கள் அவரது உயர்ந்த குணங்களை நன்கறிவர். "இப்பேர்ப்பட்ட இளைஞர் புரட்சி யியக்கத்திலா இறங்க வேண்டும்?" என்று காங்கிரஸ் கைதிகள் சொன்னதுண்டு. இன்னும் சில நாட்களுள் கப்பூர் முதலியவர்களை அந்தமான் தீவுக்கு அனுப்பிவிடப் போகின்றார்களாம். அந்தமானுக் கருகே யுள்ள ஒரு தனித் தீவில் சுமார் 100 புரட்சி இயக்கக் கைதிகளை சர்க்கார் போடப் போவதாகத் தெரிகிறது.

ஹரிஜன சமாராதனை

செங்கேரி ஹிந்து குரு குலத்தின் பிராம்மண ஊழியரில் ஒருவர் தமது பிதாவின் சிராத்தத்தில் ஹரி ஜனங்களுக்கு சமாராதனை நடத்தினார். வைதிக விற்பன்னரான பிராம்மணரொருவர் கர்மாவை நடத்தி வைத்தார். ஊழியரின் வயோதிகத் தாயார் சமாராதனையில் பரிமாறினார்.

ஹரித்வார கும்பமேள விழாவில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைப் பற்றி பொதுக் கூட்டங்கள் நடத்தலாகாதென 144 போடப்பட்டிருக்கிறது.

மதுரையில் வரி கொடாமைப் பிரசாரங்கள் வழங்கிய நான்கு பேருக்கு தலா 3 மாதம் சிறைத் தண்டனை.

கண்ணனூரில் கோபாலன் என்ற காங்கிரஸ் ஊழியரும், கள்ளிக்கோட்டையில் பரமேஸ்வரன், எ. யூ. மேனன், நம்பியார், மஞ்சுநாத ராவ் முதலியவர்களும் கைதியா யிருக்கின்றனர்.

பம்பாயில் ஜாலியன்வாலா தினத்தை அனுஷ்டித்ததற்காக இருவர் கைதியாயினர்.

அலஹாபாத்தில் தேசிய வாரக் கொண்டாட்டத்தின் பயனாக பதினாறு தொண்டர்களும், வடக்கே ஹரித்வாரத்தில் மூன்று தொண்டர்களும் கைதி செய்யப்பட்டனர்.

எரவாடா சிறையினின்று விடுதலை யடைந்த பரசுராம உர்வே என்பவர் 24 மணி நேரத்தில் பூனா எல்லையை விட்டுப் போய் விட வேண்டுமென்று ஓர் உத்தரவு பிறந்துளது.

கல்கத்தா கெஜட்டில் ராஜிய அமுல்களைப் பற்றிய விவரங்கள் பல உள. மிதுனபூர் ஜில்லாவில் ஓரிடத்தில் தண்டப் போலீஸ் போடப் போகிறார்களாம். 'கயான் மர்பாத்' என்ற புத்தகம் அராஜகம் புகட்டும் புத்தகமாம். சுபாய் ஆசிரமம் போன்ற கட்டிடங்கள் சட்ட விரோதமான காரியங்களுக்கு உபயோகப் படுத்துவதால் சர்க்கார் கண் காணிப்பில் இருக்க வேண்டுமாம்.

ருஷிய சர்க்காருக்கும் 'மஞ்சுகோ' துரைத்தனத்துக்கும் தகராறு முற்றி வருகின்றது. 'மஞ்சுகோ' அரசாங்கத்துக்குத் துணையாக ஜப்பான் நிற்பதால் சீக்கிரத்தில் ஜப்பானுக்கும் ருஷிய சர்க்காருக்கும், ஏதாவது புகைச்சல் ஏற்படுமோ வென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது.

இந்திய விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க பார்லிமெண்டினால் நியமிக்கப் பட்ட கூட்டுக் கமிட்டிக்கு லின்லித்கோ பிரபு தலைமை வகிப்பாராம். ஏப்ரல் 25-ம் தேதி யன்று கமிட்டி கூட்டம் மறுபடி நடை பெறுமாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.